செ.வெ.எண்.08 நாள் : 13.01.2017

# பத்திரிக்கைச் செய்தி

அரியலூர் மாவட்டத்தில் புதிதாக ஆதார் சேர்க்கை பதிவு செய்திட மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஒரு நிரந்திர ஆதார் மையமும், நகராட்சி அலுவலகங்கள் மற்றும் வட்டாட்சியர் அலுவலகங்களில் தலா ஒரு நிரந்திர ஆதார் மையமும் செயல்பட்டு வருகின்றன. ஆதார் பதிவிற்கு கட்டணம் ஏதுமில்லை. இது ஒரு கட்டணமில்லா சேவையாகும்.

ஏற்கனவே ஆதார் எண்ணிற்கென பதிவு செய்து இந்திய தனித்துவ அடையாள ஆணையத்தின் வாயிலாக ஆதார் எண் வழங்கப்பெற்றவர்கள் ஒரு முறைக்கு மேல் எத்தனை முறை மீண்டும் மீண்டும் பதிவு செய்தாலும் புதிய ஆதார் எண் பெற இயலாது. இந்திய தனித்துவ அடையாள ஆணையத்தின் மென்பொருள் அந்த பதிவுகளை நிராகரித்துவிடும். எனவே, ஆதார் எண் பெறுவதற்கு ஒரு முறை பதிவு செய்தாலே போதுமானதாகும்.

மேலும் ஆதார் அட்டைக்கு பதிவு செய்து ஆதார் எண் அல்லது ஆதார் அட்டை கிடைக்கப்பெறாதவர்கள் மற்றும் ஆதார் அட்டையை தொலைத்தவர்கள் தங்களது ஆதார் எண்ணை தெரிந்துக்கொள்ள ஏதுவாக அரியலூர் மாவட்டத்தில் உள்ள மூன்று வட்டாட்சியர் அலுவலகங்களிலும் பிரத்யேக ஆதார் உதவிமையங்கள் 28.02.2017 முடிய தொடர்ந்து செயல்படும்.

இந்த ஆதார் உதவி மையங்களில் ஆதார் எண்ணிற்கு ஏற்கனவே பதிவுகளை செய்து விட்டு ஆதார் எண் / ஆதார் அட்டை கிடைக்கப்பெறாத பொது மக்கள் மற்றும் ஆதார் அட்டை தொலைத்தவர்கள் நேரில் சென்று தங்களது பெயர், பிறந்த தேதி, அஞ்சல் குறியீடு எண், ஏற்கனவே எடுத்த ஒப்புகைச்சீட்டு, கைவிரல்ரேகை மற்றும் கருவிழிகளை பதிவு செய்து, சில விநாடிகளில் தங்களது ஆதார் எண்ணை அறிந்துக்கொள்ளலாம்.

மேலும், 15 வயதுக்குள் ஆதார் அட்டை எடுத்தவர்கள் 15 வயது பூர்த்தி அடைந்த பிறகு, ஆதார் எண் விபரத்துடன் அருகில் உள்ள நிரந்தர ஆதார் மையத்திற்கு சென்று உயிரியல் பதிவுகளை கட்டாயமாக 2 வருடங்களுக்குள் புதுப்பித்துக்கொள்ள வேண்டும்.

ஆதார் எண் பெற்றவர்கள் வட்டாட்சியர் அலுவலகங்களில் இயங்கும் அரசு இ-சேவை மையங்களில் காண்பித்து விரல்ரேகை பதிவு செய்து ரூ.30/- மட்டும் கட்டணம் செலுத்தி கைக்கு அடக்கமான பிளாஸ்டிக் ஆதார் அட்டையாகவோ அல்லது ரூ.10/- மட்டும் செலுத்தி காகிதத்தில் அச்சிட்டோ பெற்றுக்கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

செய்தி வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், அரியலூர்.